# திருஅத்யயன உற்சவம்



அரங்கனுக்குத் தமிழ் வேத திருஅத்யயன விழா!

ஆழ்வார்களின் தீந்தமிழ் அருளிச் செயல் விழா!

அரையர்களின் கொண்டாட்ட விழா!

திவ்யப் பிரபந்தப் பண் இசை விழா!

செந்தமிழ் வேதியரின் இயல் தமிழ்(வ்யாக்யானம்/இயற்பா) விழா!

அரையர்கள் அரங்கேற்றும் நாட்டிய(அபிநயம்)/ நாடக விழா!

22 நாட்கள் நடக்கும் 'பெரிய திருநாள்' விழா!

வையத்தோரை உய்விக்கும் வைகுண்டஏகாதசிப் பெருவிழா!
பக்தர்கள் பரவசமாகும் பகல்பத்து/இராப்பத்து திருவிழா!
நாலாயிரம் ஆண்டுகளாக நடைபெறும், நாலாயிர நற்றமிழ் விழா!!!
247 எழுத்துக்கள் கொண்ட தமிழில், அரங்கனுக்கு 247 பாசுரங்கள் பாடிய ஆழ்வார்களின் அனைத்துப் பாசுரங்களுக்கும் விழா!

திருமங்கையாழ்வார் தம்முடைய வாழ்நாளின் பிற்பகுதியில்,திருவரங்கத்தில்,திருவரங்கனுக்கு சிறப்பான பல கைங்கர்யங்களை செய்து கொண்டு எழுந்தருளி இருந்தார். ஒரு கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சித்திரத் திரு நாளில்(திருமங்கையாழ்வார் திருநட்சித்திரம்) ,நம்பெருமாள் உபய நாய்ச்சிமார்களுடன் திருமஞ்சனம் கண்டருளிய பிறகு,திருமங்கையாழ்வார் ,திருநெடுந்தாண்டகம் என்கின்ற பிரபந்தத்தை தேவகானத்தில் பாடி நம்பெருமாளை மகிழ்வித்தார்.அதன் பிறகு திருவாய்மொழி பாசுரங்களைக் கொண்டு பாடி நம்பெருமாளை உகப்பித்தார்.

இதனால்,பெருமகிழ்ச்சிகொண்ட நம்பெருமாள்,"ஆழ்வாரே உமக்கு என்ன வேண்டும்" என்று வினவினார். அதற்கு திருமங்கையாழ்வார் "மார்கழிமாதம் சுக்லபக்ஷ ஏகாதசி தொடங்கி கொண்டாடப்படும் வேதத்திற்க்கான ஏற்றமிகு விழாவில்,அந்த வேதங்களுடனே

நம்மாழ்வார் அருளிச்செய்த,"திருவாய்மொழியையும்"கேட்டு, வடமொழி வேதத்திற்கு நிகரான பெருமையை ,நம்மாழ்வார் தமிழில் அருளிச்செய்த, "திருவாய்மொழிக்கும்" தந்தருளவேணும்" என்று விண்ணப்பித்தார்.

நம்பெருமாளும் பெரிதும் உகந்து,தேவகானத்தில் பாடிய திருமங்கையாழ்வார் "திருமிடர் நோவும்" என்று, திருமங்கையாழ்வாரின் தொண்டையிலே,தைலக்காப்பை தடவச் செய்து,ஸ்வாமி நம்மாழ்வாரை "ஆழ்வார்திருநகரியில்" இருந்து,அழைத்து வருவதற்கான,ஸ்ரீமுகப்பட்டயம், மாலை,பரியட்டம்,சந்தனம் ஆகியவற்றை அனுப்பி கௌரவித்தார்.

இந்த உற்சவத்துக்காக ,ஆழ்வார் திருநகரியில் இருந்து,திருவரங்கத்திற்கு ,ஒவ்வொரு வருடமும், நம்மாழ்வார் எழுந்தருளிக் கொண்டிருந்தார். பிற்காலத்தில் ஏற்பட்ட சில இடையூறுகளால் ஆழ்வார் திருரகரியிலிருந்து, ஆழ்வார் வரமுடியவில்லை.எனவே ராமாநுஜர், ஸ்ரீரங்கம் பெரிய கோவிலிலேயே நம்மாழ்வார் விக்ரகம் பிரதிஷ்டை செய்தார். அந்த நம்மாழ்வாரே,திருமங்கை ஆழ்வார்,மற்ற ஆழ்வார்கள், இராமாநுஜர்/ஆசார்யர்களுடன் எழுந்தருளி இந்த உற்சவத்தை நடத்தி வைக்கிறார்.

திருமங்கை ஆழ்வார் தொடங்கிய போது நம்மாழ்வாரின் திருவாய் மொழிக்கு மட்டுமே, பத்து நாட்கள் உற்சவம் நடந்தது. பிற்காலத்தில் நாதமுனிகள் மற்ற திவ்யப்பிரபந்தங்களையும் நம்பெருமாள் கேட்டருள வேண்டும் என்று பிரார்த்தித்து, முதல்/இரண்டாம் ஆயிரங்களை பகல் பத்து நாட்களிலும், திருவாய்மொழியை இராப்பத்து நாட்களிலும், மூன்றாம் ஆயிரம்-'இயற்பா' க்களை இறுதிநாளன்றும் சேவிக்க ஏற்பாடு செய்தார். பின்னர் 'இராமாநுச நூற்றந்தாதி'யும் இயற்பாவுடன் சேவிக்கும் முறை ஏற்பட்டது.

முதல் திருநாள்-திருநெடுந்தாண்டகம் விழா பற்றிய அறிமுகம்:

(ஶ்ரீவைஷ்ணவஶ்ரீ. கிருஷ்ணமாசார்யரின் கட்டுரையின் அடிப்படையில்)

1) திருமங்கையாழ்வார் நம்மாழ்வாருடைய நாலு பிரபந்தங்களாகிய திருவிருத்தம், பெரிய திருவந்தாதி, திருவாசிரியம், திருவாய்மொழி ஆகியவற் றுக்கு, அங்கங்களாக ஆறு திவ்யப்பிரபந்தங்களை அருளிச் செய்தார்.

அவற்றில் ஒன்று திருநெடுந்தாண்டகம் என்னும் திவ்யப்பிரபந்தமாகும்.

2) திருநெடுந்தாண்டகம் “தாண்டகம்” என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது.
'தாண்டகம்' என்பது மலை ஏறுவதற்கு உதவியாக இருக்கும் ஒரு ஊன்றுகோல். மனித ஆன்மாவின் கடைத் தேற்றத்துக்கு நம்பெருமாளே ஊன்றுகோல் என்பதை, இப்பாசுரங்கள்விளக்குகின்றனஎண்சீர்கொண்டது(குறுந்தாண்டகம்அறுசீர்). நெடுந்தாண்டகத்தில் அடிதோறும் மெய்யெழுத்து உட்பட 26 எழுத்துக்களுக்குக் குறைவின்றி இருக்கும். இந்தப் பிரபந்தம், 30 பாசுரங்கள் கொண்டது.

3) திருநெடுந்தாண்டகத்தில் முதல் 10 பாசுரங்கள் ஆழ்வார் தாமான தன்மையிலும், அடுத்த 10 பாசுரங்கள் ஒரு தாய் தன் மகளைப்பற்றிச் சொல்வதைப் போலவும், இறுதி 10 பாசுரங்கள் தலைமகள் என்னும் நிலையில் திருமங்கையாழ்வார் பெண்ணான தன்மையில் பாடிய பாசுரங்களாகும்.

4) திருநெடுந்தாண்டகம் வேதக்கருத்துக்களைக் கொண்டதொரு வேதத்துக்கு ஒப்பானதொரு நூலாகும்.

5) இராமானுஜருடைய விருப்பப்படி கர்நாடக மாநிலத்தில் புகழ்பெற்று விளங்கி வந்த வேதாந்தியான மாதவாசார்யரை,ஸ்ரீபராசர பட்டர் திருநெடுந்தாண்டக வியாக்யானம் செய்து, தம்முடைய சீடராக்கிக் கொண்டார். இந்த மாதவாசார்யரே நஞ்சீயர் என்று அழைக்கப்படுகிறார்.

6) மற்றைய திவ்யதேசங்களில் பகல்பத்து எனப்படும் விழா மார்கழி மாதம் அமாவாசைக்கு அடுத்த ப்ரதமை தொடங்கி தசமி ஈறாக நடைபெறும். மார்கழி சுக்லபக்ஷ ஏகாதசி தினமே வைகுண்ட ஏகாதசி தினமாகும்.

7) திருவரங்கத்தில் மட்டும் ஸ்ரீபராசரபட்டர் வேதாந்தியான மாதவாசார்யரை திருநெடுந்தாண்டகம் கொண்டு திருத்திப் பணி கொண்ட நிகழ்ச்சி பகல்பத்துக்கு முதல்நாள் அரையர்களால் அபிநயித்து காட்டப் படுகிறது.

8) “சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறியாவும் தெரிந்த” இராமானுசர் காலத்தில்தான் தமிழுக்கு திருக்கோயில்களில் பெரிய தொரு ஏற்றம் அளிக்கப்பட்டது.

9) இயல், இசை , நாடகம் என்னும் மூன்று கூறுகளை உடையது தமிழ். நாதமுனிகள் வழித்தோன்றல் களான அரையர்கள்

கையில் தாளத்தோடும், இசையோடும் திவ்யப்பிரபந்தப் பாசுரங்களை பெரியபெருமாள் திருமுன்பு இசைத்து தமிழுக்கு ஏற்றம் அளிக்கும் பகல்பத்து, இராப்பத்து விழாவை திருநெடுந்தாண்டக தினத்தன்று தொடங்கி வைக்கின்றனர்.

10) அரையர்கள் தம் திருமாளிகையில் இருந்து குல்லாய் தரித்துக் கொண்டு பெரியபெருமாளுடைய காப்பந்தம், திருச்சின்னம் ஆகியவற்றுடன் புறப்பட்டு உடையவர் ஸந்நிதி, திருவரங்கப் பெருமாள் அரையர் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபார்த்தஸாரதி ஸந்நிதி, நம்மாழ்வார் ஸந்நிதி ஆகிய இடங்களில் ஸேவித்தபிறகு சந்தனு மண்டபத்தில் ஜய,விஜயாள் ஆகிய துவாரபாலகர்களுக்கு அருகில் அமர்ந்திருப்பர்.முன்னதாக,
இந்த உற்சவத்தில் தாங்கள் இசைக்கும் தாளங்களை, திருவரங்கப்பெருமாள் அரையர்(இராமாநுஜரின் ஐந்து ஆசார்யர்களில் ஒருவர்;காஞ்சி வரதராஜப் பெருமாளிடம் பிரபந்தப் பாசுரங்களை இசையோடு பாடி,அவரை உகப்பித்து, இராமாநுஜரை
அவரிடமிருந்து பெரிய பெருமாளிடம் அழைத்து வந்தவர்) திருவிக்ரகம் முன் வைத்து ஆராதனை செய்வார்கள்.

11) பெரியபெருமாளுக்கு வெள்ளைச்சரம், மாலைகள் சாற்றப்பட்டபிறகு தேங்காய்த்துருவல் அமுது செய்விக்கப்படும்.

12) “கோயிலுடைய பெருமாள் அரையர்”" வரந்தரும் பெருமாள் அரையர்" என்றோ "அல்லது "மதியாத தெய்வங்கள் மணவாளப்பெருமாளரையர்" "நாதவினோத அரையர்" என்றோ அருளப்பாடு சாதிக்கப்படும். (பகல்பத்து, இராப்பத்து விழாக் காலங் களில் அரையர்களுக்கான அருளப்பாடு மேற்கண்டவாறே சாதிக்கப்படும். )

13) அரையர்கள் திருக்கர ங்களில் இருக்கும் நாதமுனி என்றழைக்கப்படும் தாளங்கள் பெருமாள் திருவடிகளில் சேர்ப்பிக்கப்படும். அரையர்களுக்கு ஸ்தானீகர் தீர்த்தம், சந்தனம், தொங்கு பரியட்டம், மாலை ஆகியவை ஸாதிக்கப்படும்.

14) பிறகு கர்ப்பக்ருஹத்தில் மேற்குப்பகுதியில் இருந்து கொண்டு,
"பொங்குசீர் வசனபூடணமீந்த உலகாரியன் போற்றிடத்திகழும் பெருமாள்!

போதமணவாளமாமுனி ஈடுரைப்பது கேட்டுப் பூரித்து நின்ற பெருமாள்!"

என்ற கொண்டாட்டங்களை சொல்லித் திருநெடுந்தாண்டகம் முதல் பாட்டு “மின்னுருவாய்” என்பதைப் பல தடவை இசைப்பர்.

15) பின்னர் அரையர்கள் சந்தன மண்டபத்திற்கு எழுந்தருளி முதல் பாசுரமாகிய “மின்னுருவாய்” என்று தொடங்கும் பாசுரத்தினை இசையுடன் அபிநயம் செய்வார்கள்.

16) முதல் பாட்டுக்கு பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான அவதாரிகைகளும், முதல் பாட்டிலிருந்து 11ஆவது பாட்டான “பட்டுடுக்கும்” வரை தம்பிரான்படி வ்யாக்யானமும் சேவிக்கப்படும்.

17) திவ்யப்பிரபந்த பாசுரங்களுக்கு நாதமுனிகள் தொடக்கமான அரையர்கள் குலத்தில் உதித்தோர் எழுதி வைத்த வ்யாக்யானத்திற்கு தம்பிரான்படி என்று பெயர். இவை அச்சில் இல்லை. அரையர்களிடம் உள்ள ஓலைச் சுவடிகளில் பாரம்பரியமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

18) திருநெடுந்தாண்டகத்திற்கு அமைந்துள்ள தம்பிரான்படி வ்யாக்யானம் சொல்லழகும் பொருளழகும் கொண்ட கருத்தாழமிக்க சொற்றொடர்களாகும். இவற்றை கேட்கக்கேட்க உள்ளத்திலே மகிழ்ச்சி பொங்கும். திவ்யப்பிரபந்த சொற்கள்,பின்னிப்பிணைக்கப்பட்டு சந்தத்தோடு அவை அரையர்களால் சேவிக்கப்படும் போது கேட்போர் உள்ளத்தில் திவ்யப்பிரபந்தத்தின் சொல்லழகு புலப்படும்.

19) திருமங்கையாழ்வார் சந்நிதி கைங்கர்யபரர் அரையர்களுக்கு மரியாதை செய்திடுவார்.

20) பிறகு பெரியபெருமாளுக்கு அலங்காரம் அமுது செய்விக்கப்படும். தீர்த்த விநியோகம் வெள்ளிச் சம்பா ப்ரசாத விநியோகம் ஆகியவை நடைபெறும். தாம் திருநெடுந்தாண்டகம் கேட்டு இன்புற்றதற்காக, பெரியபெருமாள் "விட்டவன் விழுக்காடு" எனப்படும் தாம் அமுது செய்தருளிய அமுது படிகளில் ஒரு பகுதியை திருமங்கையாழ்வார் சந்நிதிக்கு அனுப்பியருள்வார்.
வைகுண்ட ஏகாதசி என்பது மார்கழி மாத சுக்லபட்ச ஏகாதசியாகும்.. இந்நாளில் பகவான் ஒரு ஆத்மா பரபதநாதனான தன்னை எப்படிவந்து அடையும் என நடித்து காண்பிக்கிறான் இந்த வருடம் அதன் நிறைவு நாளான

நம்மாழவாருக்கு மோட்சத்தையைம் சமர்ப்பிக்கிறான் முன்பத்து பின்பத்து என இவ்விழா 21 நாட்கள் நடைபெறும் வைகுண்ட ஏகாதசிக்கு முன் பகவான் ஆழ்வாருக்கு பரம்பதம் தர சங்கல்பம் கொண்டு அவருக்காக பரம்பத வாசலை திறக்கச் செய்து தானே ( எப்படி நம் வீட்டுக்கு வரும் விருந்தினரை வாசலில் வந்து வரவேற்போமோ அப்படி) பரம்பத வாசலுக்கு வந்து வரவேற்க்க சித்தமாகிறான்

இந்த ரத்னாங்கி சேவை என்பது இங்கு தான் ஆரம்பிக்கப்பட்டது. வைகுண்ட ஏகாதசி அன்று அரங்கனுக்கு சாற்ற பெறும் ரத்னாங்கி 1700 ஆம் வருடம் வழங்க பெற்ற அறிய ஆபரணம் 1900 ங்களில் மறுபடியும் பாகவத புருஷர்களால் செப்பனிடப்பட்டது ஏன் இந்த அங்கி என தகுந்த இடத்தில் சொல்லுகிறேன். பகல் பத்து முடித்து பரம்பதம் திறக்கப் பட்டதும் திருவரங்கத்தில் இந்த இரா பத்து நடைபெறும் அந்த பத்து நாட்களும் அரங்கன் ஒரு நாடகத்தினை தினம் நடிக்கின்றான்.

அரங்கன் திருஅத்யாயன புறப்பாடு முதல் நாள் முதல் அந்த நாடகத்தை காண்போம்

அரங்கன் மூலஸ்தானத்திலுந்து கிளம்பும் பொழுது சாதாரன போர்வை அணிந்து (வைகுண்ட ஏகாதசி நீங்கலாக )

தன் இரு அபயகரங்கள் மட்டுமே தெரியும் வண்ணம் எழுந்தருளுவார் பின்னர் மேல் படியில் மரியாதையாகி உத்தமநம்பி அவர்களுக்கு பரிவட்டம் வழங்கப் பெற்று அவர் மூலம் இந்த நாடகத்தை நடத்திவைக்க பணிப்பார் இக்கோவிலின் ஸ்தானிகர் அதன் பின் அரங்கன் புறப்பட்டு சேனை முதல்வருக்கு மரியாதைகள் வழங்கிய பின்பு நாழி கேட்டான் வாயிலை அடைவார் ,

**அது என்ன நாழிகேட்டான் ?**

அதாவது அந்த கதவுகளின் அருகில் வந்தவுடன் சரியான நேரம் தானா என்று கேட்கப்படும் நாழி:- முன்னோர் காலங்களில் நாழி என்னாச்சு? னு நம்மிடையே கேட்கும் வழக்கமும் இருந்தது அதாவது நேரத்தை நாழி என்று குறிப்பிடுவோம் ( இன்றும் சில இல்லங்களில் இப்பேச்சு உள்ளது)

நாழிக்கு 24 நிமிடம் என்பது ஒரு நாழி. அங்கு நாழிகேட்கப்படுவதின் ரகஸ்யம் அரங்கன் மூலஸ்தான புறப்படாகிய பொழுதுசாற்றியிருக்கும் அந்த போர்வை தான் நாம் அதாவது ஜீவாத்மா அவன் அந்த ஆத்மாவை போல் இரு கரங்கள் தெரிய புறப்படுகிறான்

அந்த ஜீவாத்மா தான் மேலேகிளம்ப வேண்டிய நேரத்தினை அறிந்து புறப்படுகின்றது என்பதை தெரிவிக்கவே நாழி கேட்கப்படுகிறது ஒரு ஆத்மாவின் ஜீவதசைக்கு ( மரணத்திற்க்கு) பின்பு இரண்டு வகையான பாதைகளிலில் பயணிக்கும் ஒன்று முக்திக்கு செல்ல கூடிய பாதை இன்னொன்று எம தர்மலோகமாம் எம பட்டினம் செல்லும் பாதை. முக்திக்கு செல்லும் பாதையினை அர்ச்சிராதி மார்க்கம் என்று கூறுவார் இனொன்றை துமாதி மார்க்கம் என்பார்கள் இப்பொழுது நம் அரங்கன் நமக்கு அர்ச்சிராதி மார்கத்தினை தான் காட்ட போகின்றான்

நாழி கேட்டனை அடைந்த பிறகு அரங்கன் துறை பிரகாரம் என்னும் பிரகாரம் கடப்பான் அந்த பிரகாரம் மட்டும் சற்றே மாறுபட்டது இங்கு நடுவினில் முழுதும் தொடர்ச்சியான மண்டபம் இருமருங்கும் வெற்றிடம் ஏன் இப்படி என்றால் அந்த மண்டபத்திற்கு வெளிச்சம் ஏற்றிட என்பார்கள் ஆம் அர்சிராதி மார்கத்தினை அடையும் ஜீவன் முதலில் விதியுத் அதாவது மின்னல் உலகம் பின்பு சூர்ய லோகம் சந்திரா லோகம் என ஒளிபொருந்திய லோகங்களை கடந்தே செல்லும் அதற்க்கு தான் இந்த மண்டபம். பின்பு விராஜா மண்டபம் அடைவார் அரங்கன், அங்கு வேத பாராயண கோஷ்டி முதலியன நடை பெறும் ஏன் அங்கு இப்படி ஓர் ஏற்பாடு? இந்த ஜீவன் விரஜை என்னும் பேரெழில் ஆற்றை அடையும் அதுவே வைகுண்டத்தின்

கரை அந்த ஆற்றை அடைந்த பிறகு அங்கு வேத கோஷங்கள் முழக்க தேவ மங்கையர்கள் நம்மை நீராடிடுவார்கள் நமக்கு மரியாதையை செய்வார்கள் இது வரை அந்த ஜீவனுக்கு சூக்ஷும சரீரமா இருக்கும் .   கடைசியாக விரஜையில் அந்த ஜீவன் முழுகி எழுந்த உடன் அந்த  ஜீவன் நான்கு காரமும் கஸ்தூரி திருமண் காப்போடு துலங்கும் அந்த மேனியினை வார்த்தையால் வர்ணிக்க ஒண்ணாது அதுபோலவே ஒளிபொருந்திய மேனியை அடைந்ததை குறிக்கவே இரத்தினஅங்கி (வைகுண்ட ஏகாதசி நீங்கலாக மற்றைய நாட்களில்) வைகுண்ட வாசல் அருகில் வந்த உடன் அரங்கனின் போர்வை கலையப்பெற்று கஸ்தூரி திருமண் காப்பு சாற்ற பெற்று நான்கு காரத்துடன் அவர் உயர்த்தி காண்பிக்க படுவார் இங்குதான் இரத்தினாங்கி சாத்தப்படுகிறது அதாவது அந்த பேரெழில்  ஒளி  பொருந்திய வார்த்தைகளால் வர்ணிக்கபட முடியாத மேனியினை காட்ட அரங்கனுக்கு ரத்னஅங்கி சாற்ற பெறுகின்றது  இன்னும் சொல்லப்போனால் நம்மால் விவரிக்க ஒண்ணா காந்தியினை கூறவே உலகில் கிடைக்கும் இயற்கையான ஒளி பொருந்திய கற்களால் ஆனா அங்கிசாத்தப்படுகிறது இதையே இன்று வேறுபல திவ்யதேசங்களிலும் செய்கிறார்கள் பின் அந்தமிழ் பேரின்ப நாடாம் வைகுந்தமடைவார

அப்படிபட்ட பேரோளியான ஆத்மா வைகுண்டத்தில் பகவானுடன் (திருவரங்கத்தில் பகவான் 1000 கால்களையுடைய மண்டபத்தின் நடுவே அதாவது திருமாமணிமண்டபத்தில் ஆனந்தமாக எழுந்தருளிஇருப்பார்) என்றும் ஆனந்த பரவசத்தில் திளைப்பதை தாம் நாம் அரங்கன் பரமபத வாசல் கடந்து நடத்தி காட்டுகிறார். ஆயிரம் கால் மண்டபமான இந்த லீலா விபூதி அதாவது இந்த அவன் தற்காலிகமாக ஏற்பட்டுத்திருக்கும் இந்த வைகுண்டத்தைஅடைகிறார் இப்படியாக ஒரு ஜீவனின் வழியை தானே நடித்து அதன் தன்மையினை அணிந்து காட்டுகின்றார்.நம்மாழ்வாருக்கு மோட்சமருளும் நாள் அவர் காட்டிய வழியில் நாம் சென்றால் அவரால் நமக்கும் மோட்சம் கிட்டும். ஆழ்வார் ஆசாரியர் வழி நடந்து நாமும் மோட்சத்தை அடைவோம்!